விண்ணும் மண்ணும் எங்கள் பக்கம்
வீசும் காற்றும் எங்கள் பக்கம்
மார்பு தட்டி வீரம் சொல்லு தமிழா
இன மானம் எங்கள் தேக ரத்தம் தமிழா

வெல்லும் வழி திசைகள் பக்கம்
வல்ல புலி கொடியின் சொர்க்கம்
உரிமை எங்கள் வாழ்வின் உலகம் தமிழா
இந்த உணர்வு தானே ஈழம் வெல்லும் தமிழா

வீர வாழ்வை மொழியின் உயிரின் எழுது எழுது தமிழா
விடியும் ஒரு நாள் ஈழம் என்று சபதம் எழுது தமிழா
இருளின் மடியில் துயிலும் வாழ்வை விடியச்செய்வாய் தமிழா
இனமே எங்கள் இமையம் கண்ட உலகம் என்பாய் தமிழா
தலைவன் நிமிர்வில் பாலமாய் நீயடா தமிழாய் நின்று கழமாய் நீயடா

உயிரும் உடலும் போல எங்கள் தோறும் வாழ்வு தமிழா
உரிமை ஒன்றே உனது வாழ்வை பெருமை செய்யும் தமிழா
தேடும் திசைகள் எங்கும் எதிலும் உனது பேருமை தமிழா
தேசம் இல்லா வாழ்கை என்ற இழிவு எண்டா தமிழா
தேரோட்டம் கூட போராட்டம் இந்த வேதம் தான் வாழ்கையின் நீரோட்டம்
ஆடட்டும் கழங்களில் புலியாட்டம் தமிழா தமிழா தமிழா தமிழா

இருளின் திசையை உனது வீரம் விடியச் செய்யும் தமிழா
பிளந்து நாங்கள் வீழ்ந்தால் கூட ஒரு நாள் விடியும் தமிழா
புலிகள் நடந்த தடங்கள் யாவும் புயலின் சிகரம் தமிழா
புதிய புதிய களங்கள் ஒன்றே வாழ்வை வெல்லும் தமிழா
மாவீரம் ஈகம் வழிகாட்டும் அந்த மாதவா உணர்வே உயிர் ஓட்டம்
அளியாது ஒருநாளும் தமிழீழம் தமிழா தமிழா தமிழா தமிழா